பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம் நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : ஆவணி 20உ (5—9—67) செவ்வாய் ★ வெளியூர் : ஆவணி 21உ (6—9—67) புதன் [இதழ் : 70

முதல் பட்டமளிப்பு விழாவில் முதல் உரை!

மதுரைப் பல்கலைக் கழக முதலாவது பட்டமளிப்பு விழா செப். 7-ல் நடக்கவிருக்கிறது.

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள்முதன்முதலாகப் பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்துவார்கள்.

இவ்விழாவுக்குத் தமிழக ஆளுநரும் பல்கலைக் கழக வேந்தருமான சர்தார் உஜ்ஜல் சிங் தலைமை வகிப்பார்.

இலண்டன் நகரில் இரா. செழியன்

தமிழ்ச் சங்கத்தில் வரவேற்பு---
நாடாளுமன்றச் சார்பில் விருந்து

இலண்டன், செப். 2—

வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நாடாளுமன்றத் தி. மு. க. செயலாளரும், 'நம் நாடு' ஆசிரியருமான திரு. இரா. செழியன் அவர்கள், ஆக. 23-ம்நாள் இங்குவந்து சேர்ந்தார்.

இங்கிலாந்தில் அவர், தொழிற் கட்சி-கன்சர்வேடிவ் கட்சி—லிபரல் கட்சி—ஆகிய அரசியல் கட்சிகளின் தலைமையகங்களுக்குச் சென்று முக்கிய உறுப்பினர்களைச் சந்தித்தார்.

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்துக்கும், ஆங்கில மாகவி ஷேக்ஸ்பியர் பிறந்த இடமான 'ஸ்ட்ராபோர்டு-ஆன்-சயான்' என்ற ஊருக்கும் சென்றார்.

இங்கிலாந்தில் மிகப் பெரிய தொழிற் சங்கமான போக்குவரத்து--பொதுத் தொழிலாளர் சங்கத்தின் தலைமைச் செயலகத்தின் அழைப்பை ஏற்று அங்கும் சென்றுவந்தார்.

ஹார்வரில் உள்ள அணு ஆராய்ச்சி நிலையத்திற்குச் சென்று பார்வையிட்டார்.

இங்கிலாந்து நாடாளுமன்றத்துக்கும் சென்றிருந்தார். லார்டு சோரன்சன் தலைமையில் ஒரு விருந்து அளித்து வரவேற்றனர்.

பிரிட்டிஷ் வானொலியின் (பி. பி. சி.) தமிழ்ப் பிரிவுக்கு ஒரு பேட்டி பதிவு செய்தார் ; இன்னும் 15 நாட்களில் (ஒரு ஞாயிற்றுக்கிழமையில்) அந்தப் பேட்டி ஒலிபரப்பப்படும்.

இன்று மாலை இலண்டன் தமிழ்ச் சங்கச் சார்பில் திரு. மெய்யப்பன் தலைமையில் ஒரு வரவேற்பு நடைபெற்றது.

'ஆசியாவுக்கு ஒரு ஜப்பான்போல இந்தியாவுக்குத் தமிழ் நாடு ஆகட்டும்'

'தமிழும் ஆங்கிலமும் நமக்குப் போதுமானவை'

கழக அரசின் நிலையை மீண்டும் உறுதிப்படுத்துகிறார் கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்

" தமிழும் ஆங்கிலமும் என்ற 'இரு மொழித் திட்டம்' இங்கு நமக்குப் போதுமானதாகும் "

என்று கோவையில், பி. எஸ். ஜி. தொழிற்கல்லூரியின் இலக்கிய மன்றத்தில் பேசுகையில், கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

" இந்தியாவின் மற்ற பகுதிகள், ஆங்கிலத்தை ஒரு பொருட்டாக மதிக்கின்றனவோ இல்லையோ -- அது பற்றி நமக்குக் கவலையில்லை ; நாம் அந்த மொழியை ஏற்போம்—பயன்படுத்துவோம் "

என்று சில நாட்களுக்கு முன்னர் சென்னை விவேகானந்தா கல்லூரியில் தெரிவித்த கருத்தினை மீண்டும் உறுதிப்படுத்திய அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், மேலும் தெரிவித்திருப்பதாவது :—

" ஆங்கிலத்தின் துணைகொண்டுதான் நம் கண் முன்னாலேயே ஜப்பான் பல துறைகளிலும் பிரமிக்கத்தக்க முன்னேற்றத்தைப் பெற்றிருப்பதனைப் பார்க்கிறோம் !

" ஆங்கிலத்தின் துணையைக் கொண்டு தமிழையும் நாம் உலகம் புகழும் மொழியாக மேலும் பரப்ப இயலும் !

" 'ஆசியாவுக்கு ஒரு ஜப்பான்' என்ற அதிசய நிலையை அந்த நாடு பெற்றிருப்பதனைப்போல் இந்தியாவின் ஏற்றம் மிகுந்த மாநிலமாகத் தமிழகமும் முன்னேற நாம் பாடுபடுவோம் !

" தமிழை ஒரு குறிப்பிட்ட காலத்தில் பயிற்சி மொழியாகக் கொண்டுவந்து விடுவது என்பது இயலாத காரியம்தான்; ஆனால், அதனைப் படிப்படியாக பயிற்சி மொழியாக ஆக்குவதன் மூலம், ஆங்கிலம் இருக்கும் இடத்தினை அது எட்டும்படி வைக்கலாம் !"

ஊழல் அமைச்சர்கள் மீது விசாரணை

பெங்களூர், செப். 3—

" அமைச்சர்கள், அதிகாரிகள் முதலியவர்கள்மீது கொண்டு வரப்படும் எல்லாக் குற்றச்சாட்டுக்களும், சனநாயக ஆட்சியில் விசாரணை செய்யப்பட வேண்டும்; அவற்றை விசாரணை செய்யாமல் தள்ளி விடக்கூடாது "

என்று நிர்வாகச் சீர்திருத்தக் குழுத் தலைவர் அனுமந்தையா, செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறார்.

'மேற்கு வானம்'

மேலைநாட்டுச் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டுள்ள 'நம் நாடு' ஆசிரியர் திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்கள், 'மேற்கு வானம்' என்ற தலைப்பில் எழுதும் கட்டுரை, 'நம் நாடு' இதழில் இடம் பெறும்.

தேர்ந்தெடுக்க உரிமை இருக்கிறது-- நிர்வகிக்க ஏன் இல்லை உரிமை?

புரட்சிக் குரல் கொடுக்கிறார் புதுவை முதல்வர்!

மத்திய அரசின் நேரடி மேற்பார்வையில் இருக்கும் 'யூனியன் பிரதேச'மாக இருப்பதால் புதுவை அரசு அழுத்திவைக்கப்பட்டிருக்கிறது. நிதி—நிர்வாகம் ஆகிய இரண்டிலும் முடிவாக முடிவு செய்யவேண்டிய பொறுப்பு மத்திய அரசிடமே இருப்பதால், ஒவ்வொன்றுக்கும் புதுடில்லிக்கு ஓடவேண்டி இருக்கிறது.

" மத்திய அரசினை எதற்கும் நம்பிக்கொண்டில்லாமல், நிதி—நிர்வாகப் பிரச்சினைகளில் பாரிய அளவில் முடிவெடுக்கும் உரிமை இருப்பதுதான், சனநாயக முறையில் அமைந்துள்ள புதுவை அரசுக்கு மட்டுமன்றி பிற யூனியன் பிரதேச அரசுகளுக்கும் நல்லதாகும்.

" தங்களால் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் மூலம் ஆட்சி நடத்த உரிமை இருக்கிறபோது, தாங்கள் விரும்புகிறபடி சிறந்த வகையில் அதை நடத்திச் செல்ல நிர்வாக உரிமை மறுக்கப்படுவதில் பொருளே இல்லை "

இப்படி, புதுவை முதலமைச்சர் பரூக் மரைக்காயர் புதுடில்லியில் செய்தியாளர்களிடையே குறிப்பிட்டார். அரசியல் அமைப்பு பாராளுமன்ற முறைகள் பற்றிய ஆராய்ச்சி நிலைய மாணவரிடையே பேசி முடித்த பிறகு, செய்தியாளர், 'புதுவை அரசியல் நிலை' பற்றி கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் வகையிலேயே இப்படிச் சொல்லி இருக்கிறார் புதுவை முதல்வர்.

தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போயிற்று!

நாசருக்கு எதிரான நாசவேலைகள் நசுக்கப்பட்டன

இராணுவப் புரட்சியிலும், எகிப்து அதிபர் நாசருக்கு எதிரான நாசவேலைகளிலும் ஈடுபட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் முன்னாள் பீல்டு மார்ஷல் அப்துல் அக்கீம் கமர், முன்னாள் அமைச்சர் சாம்ஸ்பர்தன் ஆகிய இருவரும் கெய்ரோவில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

'இந்த இருவரின் திறமைக் குறைவு காரணமாகத்தான் எகிப்து, இஸ்ரேலிடம் தோல்வியுற நேர்ந்தது' என்ற காரணத்துக்காக ஏற்கனவே இவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தனர் !

அரபு உச்சகட்ட மாநாட்டுக்காக அதிபர் நாசர்புறப்பட்ட சென்ற ஆகஸ்டு 27-ம் நாளை இவர்கள் தங்கள் சூழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் நாளாகக் கொண்டிருந்தார்கள் !

வார்னிஷ் தடை நீங்குகிறது

சென்னை, செப். 5—

வார்னிஷ் விற்பனைக்கு விதிக்கப்பட்டிருந்ததடையை நீக்குவதென்று தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

நகரப் பேருந்துக் கட்டணச் சீரமைப்பு

சென்னை, செப். 4—

" நகரப் பேருந்து கட்டணச் சீரமைப்புத் திட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர்தான் அது தொடர்பாகச் சொல்லப்படும் சில குறைபாடுகளை நீக்குவது பற்றி கவனிக்க முடியும் " என்று பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி கூறினார்.

திருவாளர் சந்தேகம்

'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்றார்கள் நமது முன்னோர்கள்! அதைச் சற்று மாற்றிக் கடைபிடிக்கிறார் மொரார்ஜி தேசாய் !

அதாவது, திரைகடலோடி கடன் திரட்டுகிறார்—காலத்துக்கேற்ற சாமர்த்தியசாலி!

இப்போதுதான் கிழக்கே—ஜப்பானுக்குப் போய்விட்டு வந்தார் !

நாளை முதல் முப்பது நாட்கள் மேற்கே சுற்றிப்பார்த்து, கடன் கேட்கப்போகிறார்!

1966—67, 1967—68 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மட்டும் இந்தியா, 1,800 மில்லியன் டாலர்கள் வெளி நாட்டுக் கடன் அல்லது உதவி பெற்றிருக்கிறதாம் !

ஒரு மில்லியன் என்பது பத்து இலட்சம் ரூபாய் ; ஒரு டாலர் என்பது சுமார் ஏழரை ரூபாய் ;—கணக்குப் போட்டுப் பார்த்துக்கொள்ளுங்கள் !

இதில், உணவுக்காக வாங்கிக் கொண்டது சேர்க்கப்படவில்லை !

இருக்கின்ற நிதியை எப்படி எப்படிச் செலவு செய்வது என்பதுதான் நிதியமைச்சரின் வேலை !

ஆனால் இந்தியாவிலோ, கடன்களை எப்படி எப்படித் திரட்டுவது என்பதுதான் நிதியமைச்சரின் அதி முக்கிய அலுவலாக இருக்கிறது !

கடன்கள் எழுப்புவதற்கு என்றே ஒரு தனி அமைச்சர் -இலாகா ஏற்படுத்திவிட்டால் என்ன ?

இராஜஸ்தான் அமைச்சரவை இரு மடங்குக்குமேல் பெரிதாகிறது

சுகாதியாவின் புதிய 'சேர்க்கை'கள் !

கருநாடகத்திலும் புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படலாம்

கடந்த ஏப்ரல் வாரக் கடைசியில் பதவி ஏற்றபோது ஒன்பது 'காபினெட்' அமைச்சர்களையும் மூன்று துணை அமைச்சர்களையும் பெற்றிருந்த இராஜஸ்தான் மாநிலத்தின் சுகாதியா அமைச்சரவையின் எண்ணிக்கை, இன்றுமுதல் முப்பது ஆக மாறுகிறது.

எதிர்க் கட்சியிலிருந்து வந்து சேர்ந்து— அமைச்சரவை அமைப்பதற்குக் காரணமாக இருந்த 17 பேர்களில், இருவருக்குப் பதவி கிடைக்கிறது !

கருநாடகத்திலும் :

முதலமைச்சரைச் சந்தித்த செய்தியாளர்களின் தகவலின்படி, கருநாடக மாநிலத்திலும் அண்மையில் புதிய அமைச்சர்கள் நியமனமாகலாம் எனத் தெரிகிறது.

'அமைச்சரவை பெரிதாகுமா' என்று கேட்டதற்கு முதல்வர் நிஜலிங்கப்பா, 'பொறுமையாக இருங்கள் ; அக்டோபர் அல்லது நவம்பரில் தெரியவரும் ?' என்று கூறியிருக்கிறார்.

நம்நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

திருவள்ளுவராண்டு 1998 ஆவணி 20 (5—9—67) செவ்வாய்

இந்தி ஆதிக்கத்தின் பயங்கர விளைவு

இந்தி மொழியை, எப்படியும் இந்தி பேசாத மக்கள்மீது திணித்துவிட வேண்டும் என்பது, இந்தி மொழியினரின் பேரவா! இப்பேரவாவை நிறைவேற்றிக்கொள்ள அரசியல் சட்டத்தைக் காட்டி மிரட்டவும், ஆட்சி மொழி—தொடர்பு மொழி—நூலக மொழி என்றெல்லாம் அம்மொழிக்குப் பெயர்சூட்டி மயக்கவும் இந்தி மொழியினர் துணிந்துள்ளனர்.

இந்தியாளர்கள், தங்கள் தாய்மொழிக்கு ஏற்றம் தேடுவதில் எத்தகைய வெறிகொண்டிருக்கின்றனர் என்பதை, இந்தி பேசாத பகுதியினர் ஏற்கனவே தெளிவாகத் தெரிந்துகொண்டிருக்கின்றனர்.

காங்கிரசுக் கட்சிக்குள்ளாகவே இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு இருக்கிறது என்ருலும், 'கட்சிக் கட்டுப்பாடு' என்பதற்காக இந்திக்கு ஆதரவு காட்டிவருகின்ற இந்தி பேசாத பகுதியைச் சேர்ந்த காங்கிரசு ஆட்சியினர்கூட, 'இந்தியை நுழைப்பதில் காலக் கெடுவோ, தீவிரமோ கூடாது' எனக் கூறுவதன் மூலம், இந்தித் திணிப்பில் தங்களுக்கு இருக்கின்ற எதிர்ப்பை – இல்லை—அதிருப்தியை வெளிப்படுத்திக் கொள்கின்றனர்.

இந்தித் திணிப்பு வெறிக்கு எதிராக இருக்கக்கூடிய எதிர்ப்பின் அளவையும், தன்மையையும் இந்தியாளர்கள் தெரிந்தே இருக்கின்றனர். இருந்தாலும், தங்கள் போக்கை சிறிதளவுக்கும் தளர்த்திக்கொள்ள அவர்கள் விரும்பவில்லை. 'கிளம்பக்கூடிய எதிர்ப்பை எப்படியும் அடக்கிவிட முடியும்' என்ற நம்பிக்கையில், மிதமிஞ்சிய ஆணவத்துடன் இந்தியைத் திணிப்பதில், இந்தியாளர்கள் தீவிரம் காட்டிவருகின்றனர்.

சில நாட்களுக்குமுன், ரிசர்வ் பாங்கி நிர்வாகி ஒருவர், உத்தரப் பிரதேச நிதி அமைச்சுத் துறையிலிருந்து இந்தி மொழியில் எழுதப்பட்டிருந்த கடிதம் ஒன்றுக்குத் தக்க பதில் எழுதாததுடன், இந்தி மொழியில் எழுதப்படுகின்ற கடிதங்களுக்குப் பதில் எழுத முடியாது என்றும், ஆங்கிலக் கடிதங்கள்தான் அதிகாரபூர்வமான கடிதங்களாகக் கொள்ளப்படும் என்றும், இந்தியுடன் ஆங்கில மொழிபெயர்ப்புக் கடிதங்களும் எழுதப்பட வேண்டும் என்றும் உ. பி. நிதி அமைச்சுத் துறைக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தார். ரிசர்வ் பாங்கி அதிகாரியின் இக்கோரிக்கையை, தொடர்புடைய நிதி அமைச்சர் கண்டித்தார்.

இந்த நிகழ்ச்சியை வைத்துக்கொண்டு, நாடாளுமன்றக் கூட்டத்தில், 'இந்தியில் கடிதம் எழுதினல் கவனிக்கப்படமாட்டாது' என எழுதிய ரிசர்வ் பாங்கி அதிகாரியை, 'அப்பொறுப்பிலிருந்து விரட்டிவிட வேண்டும்' என, சேத் கோவிந்த தாஸ் என்ற உறுப்பினர், மிக்க கொதிப்புடன் கூறினர். இதற்குப் பதிலாக, அதே நாடாளுமன்றக் கூட்டத்தில் அப்பொழுது இருந்த முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும், மற்ற இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்த சில உறுப்பினர்களும், 'இந்தியில் எழுதப்பட்ட கடிதங்கள் கவனிக்கப்படமாட்டாது' என எழுதிய அந்த அதிகாரிக்குப் 'பதவி உயர்வு கொடுக்க வேண்டும்' எனக் கோரலாயினர். இந்த நிகழ்ச்சி இந்த அளவுடன் நின்றுவிட்டது

நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரையில், 'ஆங்கிலத்தில்தான் கடிதங்கள் எழுதவேண்டும்' என, உ. பி. நிதி அமைச்சுத் துறைக்கு ரிசர்வ் பாங்கி அதிகாரி வெளியிட்ட வேண்டுகோள் விவகாரம், மேலே குறித்திருக்கின்ற கருத்து மோதுதலுடன் நின்றுவிட்டது. ஆனல், உத்தரப் பிரதேச அமைச்சரோ அந்த விவகாரத்தை மேலும் தொடர முனைந்துவிட்டிருக்கின்ருர்.

உலக உத்தமர் காந்தியார் பிறந்த நாளான அக்டோபர் இரண்டாம் நாள் முதற்கொண்டு உ. பி. நிதி அமைச்சுத் துறையில், இந்தி, ஆட்சி மொழியாக நடைமுறைக்கு வருகிறதாம். அந்த நாளிலிருந்து, இந்தி மொழி நீங்கலாக வேறு எந்த மொழியிலும் ரிசர்வ் பாங்கிக்கு ஒரு கடிதம்கூட நிதி அமைச்சுத் துறை எழுதப் போவது கிடையாதாம். இந்தத் தகவலை உ. பி. நிதி அமைச்சராக உள்ள இராம் சுவரூப் வர்மா என்பவர் அறிவித்துள்ளார்.

இப்படி அறிவித்த அளவுடனும் நிதி அமைச்சர் இருந்துவிடவில்லை. ரிசர்வ் பாங்கியைத் தம்முடைய இந்தி மொழி வெறிக்குப் பணிய வைக்கப்போவதாகவும் சூளுரைத்துக் கொண்டிருக்கின்ருர்.

> "இந்தி மொழியில் எழுதப்படக்கூடிய கடிதங்களை ரிசர்வ் பாங்கி ஏற்றுக்கொள்ள வேண்டும்; அல்லது நான் அமைச்சர் பதவியிலிருந்து விலகிவிட வேண்டும்."

இதுதான், நிதி அமைச்சர் வர்மாவின் சூளுரை.

ரிசர்வ் பாங்கி, உத்தரப் பிரதேசத்துக்கோ அல்லது இந்தி மொழி பேசப்படுகின்ற மற்ற மாநிலங்களுக்கு மட்டுமோ சொந்தமானதல்ல; இந்தி பேசாத பகுதிகளுக்கும் அது சொந்தமானதாகும். அனைத்து மாநிலங்களிடமும் தொடர்பு கொண்டிருக்கின்ற ரிசர்வ் பாங்கி தமக்கு மட்டுமே சொந்தமானதுபோல் தீர்மானித்துக்கொண்டு உ. பி. நிதி அமைச்சர், அந்தப் பாங்கியின் மீது இந்தி மொழியைத் திணிக்கத் துணிவது, அவருடைய இந்தி வெறியையும், மொழி ஆதிக்கப் போக்கையும் காட்டுவதாகும்.

இந்த நிதி அமைச்சரின் மொழி ஆணவத்தால், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய விளைவின் பயங்கரம் ஒரு பக்கம் இருக்க, நிகழ் காலத்தில் ரிசர்வ் பாங்கியில் கொந்தளிப்பும், நிர்வாகக் குழப்பமும் ஏற்படும் என்பது உறுதி. இதுவுமன்றி, உ. பி. அமைச்சரவையும், உடைந்து உருக்குலைந்து போகும் என்பதும் உறுதியிலும் உறுதியாகும்.

—கா. க.

பாட்டீல் வருகிருர் --- பராக்! பராக்!

புதுடில்லியில் கூடிக்கலைந்திருக்கும் காங்கிரசு மேலிடம், காங்கிரசு அல்லாத ஆட்சி நடக்கும் மாநிலங்களுக்கும், நிலைமைகளை ஆராய 'நிபுணர்'களை அனுப்ப முடிவு செய்திருக்கிறது!

"நமது வீடுதான் இந்த அலங்கோலத்தில் இருக்கிறதே—அடுத்த வீட்டு நடவடிக்கைகள் பற்றி நமக்கு என்ன வேலை" என்ற ஒதுங்கிப் போகும் மனப்பான்மையைக் காணேம்!

காங்கிரசைச் சீர்திருத்துவதற்கு முன்னல், காங்கிரசு அல்லாத ஆட்சி நடக்கும் மாநிலங்களில் 'ஏதாவது கிடைக்காதா' என்று அலையும் போக்குதான் தெரிகிறது!

தமிழகத்துக்கும், கேரளத்துக்கும் வருகிருர் பாட்டீல்—காங்கிரசு மேலிடத்தின் பார்வையாளராக!

'வருபவர் எப்படிப்பட்டவர்' என்பது, உங்களுக்குத் தெரிய வேண்டாமா?

★ 'பதவி விலகினல் மட்டும் விழுந்த இரயில் எழுந்துவிடுமா?' என்று—தொடர்கதை போன்ற இரயில் விபத்துக்களுக்குப் பதில் சொன்னவர்!

★ 'கேரளத்தில் கவிழப் போகிறது காங்கிரசு' என்ற சூசகத்தை, முதன் முதலில் கூறியவர்!

★ சிவசேனைக்குப் பரிவட்டம் கட்டியவர்! பக்கபலமாக இருப்பவர்! 'மகாராட்டிரர்களை எப்படியும் காப்பேன்' என்றவர்!

★ மதுவிலக்கு என்ன மதுவிலக்கு? பிரச்சினை வேறு இல்லையா உங்களுக்கு?' என்று, மேலிடத்தில் முகம் சுளித்தவர்!

★ 'பொது வாக்கெடுப்பு ஒன்றை இப்போது நடத்தினல் தெரியும்—நீங்கள் பதவியைவிட்டு அப்புறப்படுத்தப்படுவது' என்று—காங்கிரசுக்குச் சரிந்து வரும் மக்கள் மதிப்பினை

—சமீபத்தில் பம்பாயில் படம் பிடித்துக் காட்டினர்!

★ வெளிநாட்டுக் கொள்கையில் மத்திய அரசை, சரியான பிடி பிடித்தார்—அந்தப் பேச்சிலேயே—'ஆதரவுகள் மூலம் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்; அரபு–இஸ்ரேல் பிரச்சினையில் அறிவுரை சொல்ல உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?' என்று கேட்டார்!

★ 'இந்தியாவின் பெருமை இந்த இருபதாண்டுக் காலத்தில் உலக அரங்கில் இறங்குமுகத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது; வெளிநாட்டுக் கொள்கையில் உள்ள 'ஓட்டை'கள்தான் இதற்குக் காரணம்' என்று—தயவுதாட்சண்யமின்றி எடுத்துக் காட்டினர்!

★ மன்னர்களுக்கு மானியத் தொகை தரும் பிரச்சினையில், மாற்றுக் கருத்தினைக் கொண்டவர்!

★ பொருளாதாரக் கொள்கையில், 'தனியார் துறை' பக்கம், கொஞ்சம் தணியாத அக்கறை கொண்டவர்!

★ காங்கிரசுத் தலைவர் காமராசருக்கு, 'சிம்ம சொப்பனம்' போன்றவர்!

★ 'காமராசர் என்ன காமராசர்' என்று, சமயம் கிடைக்கும்போதெல்லாம் பேசுபவர்; அல்லது அக்கருத்தினை மறைமுகமாகக் காட்டுபவர்!

★ காங்கிரசின் அனைத்திந்திய அமைப்பில் அதிகமாக அக்கறை கொண்டவர்!

★ 'எனக்கென்று ஓர் இடம்—எனக்கென்று ஒரு வகை பக்தர்கள்' என்று—தாய் தந்தையரிடம் கொண்ட கோபத்தால் குன்றுகள்தோறும் குடியேறியதாகக் கூறுவார்களே பக்திக் கதைகளில்—அதனைப்போல் இவர், மராட்டியக் காங்கிரசின் குறுநில மன்னர்! கொள்கை—தத்துவத்தில், தனி 'பாணி'யினைக் கொண்டவர்!

இத்தனைக் குணதிசயங்களையும் கூறிவிட்டேனே என்று பார்க்க வேண்டாம்!

இருந்தாலும், இவரும் ஒரு காங்கிரசுக்காரர்தான்! அதுவும் அனைத்திந்தியக் காங்கிரசுக்காரர்!

அவர் வருகிருர் தமிழகத்துக்கு—காங்கிரசின் மேலிடத்துப் பார்வையாளராக!

எப்பேர்ப்பட்ட தேர்வு! எத்துணைப் பொருத்தம்!

பார்ப்போம்—இங்கே உள்ள காங்கிரசுக்காரர்கள், அவரை எப்படி வரவேற்கிருர்கள் என்று!

பொறுத்துப் பாருங்கள்! அவர், கழக ஆட்சியில் கண்டுபிடிக்கப் போவதைவிட, தமிழ் நாடு காங்கிரசு பற்றிச் சொல்லப் போவது, வெகு 'சுவை'யாக இருக்கும்!

'காசைக் கொடுத்து தேளைக் கொட்டிக்கொண்டோமே' என்று—இங்கே உள்ள காங்கிரசுக்காரர்கள் பதட்டப்பட்டாலும், ஆச்சரியப்படுவதற்கில்லை!

—எஸ். ஆர்.

வாக்கெடுப்பு நடத்தினல் 'வண்டவாளம்' புரியும்!

உலக நாடுகளின் பார்வையில் இந்தியா அவலநிலைக்கு ஆளாகியுள்ளது!

'கேட்காதவர்களிடம் வலிய சென்று புத்திசொல்லாதீர்' --- ஆட்சியினரைக் கண்டிக்கிருர் எஸ். கே. பாட்டீல்

"இந்தியாவின் மேற்கு ஆசியக் கொள்கை, உலக நாடுகளின் கருத்தில் பலத்த கண்டனத்துக்குள்ளாகியிருக்கிறது; ஐ. நா.-வுக்கும் முந்திக்கொண்டு இஸ்ரேலை, 'ஆக்கிரமிப்பு நாடு' என்று இந்தியா விளித்தது சரியன்று"

என, பம்பாயில் நடைபெற்ற காங்கிரசுக் கூட்டமொன்றில், முன்னுள் மத்திய இரயில்வே அமைச்சர் எஸ். கே. பாட்டீல் பேசியிருக்கிருர்.

இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துவிட்டுத் திரும்பியிருக்கும் அவர், இத்தொடர்பில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"கேட்காதவர்களிடம் நமது ஆட்சியாளர்கள் வலிந்து புத்திமதி சொல்லப் போகிருர்கள்; இது நாட்டின் நலத்துக்கு உகந்ததல்ல!

உலகத்தின் முக்கிய பிரச்சினைகளில் இந்தியா எடுத்த சில முடிவுகள், அனைத்து நாடுகளின் வருத்தத்தைத்தான் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறது!

வல்லவர்களும் துணியாத பிரச்சினைகளில் இந்தியா எடுத்த அவசர முடிவுகள், நாட்டின் கௌரவத்தை வெகுவாகப் பாதித்திருக்கின்றன! 'சாத்தியக்கூறு உள்ளனவற்றைச் செய்யுங்கள்; உங்கள் அறிவுரை தேவைப்பட்டாலன்றி நீங்களே வலிய சென்று தர முயற்சிக்கக் கூடாது' என்பதுதான் ஆட்சியாளர்களுக்கு நான் கூறும் யோசனை!

ஒரு வாக்கெடுப்பு மட்டும் நடத்தினல் பொதுமக்களிடம் எந்த அளவுக்கு இந்த அரசு நம்பிக்கை இழந்திருக்கிறது என்பது அப்பட்டமாக விளங்கும்."

இந்திக்காரர்கட்குப் புதிய தலைவலி!

இந்திய அரசியல் சட்டத்தின் மொழி அட்டவணையில் சேர்க்கப்படாத மொழிகளில் 'போஜ்புரி'யும் ஒன்று.

'இந்திப் பகுதிகள்' என்று சொல்லிக்கொள்ளப்படும் பீகார், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 'போஜ்புரி' பேசும் மக்கள் உள்ளனர்.

இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் இவர்கள் பத்துச் சதவிகிதத்தினருக்கும் அதிகப்பட்டவர்கள்!

இந்திக்கும் – பஞ்சாபிக்கும் எவ்வளவு இடைவெளி உண்டோ அவ்வளவு, போஜபுரிக்கும் – இந்திக்கும் இடையேயும் உண்டு!

'போஜ்புரி மொழிக்கு இந்தியிடம் உள்ள நெருக்கம், உருது மொழிக்கு உள்ளதைக் காட்டிலும் குறைவு' என்று கூறலாம்.

போஜ்புரி பேசும் மக்கள் தங்களை இந்திக்காரர்களிடமிருந்து பிரித்துப் பேசுவதும், தனி போஜ்புரி மாநிலம் கோரத் தொடங்கியுள்ளதும் இந்தி வெறியர்களுக்குத் தலைவலியைத் தந்துள்ளது!

இந்திரா கூற்றில் உண்மை உண்டா?

இந்தி ஆதரவு வாதத்துக்குச் சுடச்சுடப் பதில்

பிராங் அந்தோனியின் ஆணித்தரமான வாதம்

“ஆங்கிலம் இந்த நாட்டு மக்கள் தொகையில் ஒரு சதவிகிதத்தினரால்தான் பேசப்பட்டு வருகிறது; எனவே, ஆங்கிலமல்ல—இந்திதான் இணைப்பு மொழியாக இருக்கமுடியும்” என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி பேசிவருவதற்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில், நாடாளுமன்ற உறுப்பினர் பிராங் அந்தோணி, ‘தலைமையமைச்சரின் மொழிக் குழப்பம்’ என்ற தலைப்பில், கட்டுரை ஒன்று எழுதியிருக்கிறார்; அதன் பகுதிகள் பின்வருமாறு:—

“மக்களில் 42 சதவிகிதத்தினர் இந்தி பேசுகின்றனர் என்று கூறுவது வெறுங் கட்டுக்கதை.

இந்தி பேசுபவர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் காட்டுவதற்காகப் பஞ்சாபி — உருது — இராஜஸ்தானி போன்ற தனித்தன்மை வாய்ந்த மொழிகளைப் பேசுகின்றவர்களையெல்லாம், ‘இந்திக்காரர்கள்’ என்று பட்டியலில் சேர்த்தார்கள் என்பதுதான் உண்மை!

இப்பொழுது நம்மீது அனைத்திந்திய மொழி என்று திணிக்கப்படும் ‘கடி போலி’ இந்தி, 1850-ம் ஆண்டிற்கு முன்னால் வழக்கிலேயே இருக்கவில்லை!

இந்திய வரலாற்றின் எந்தக் கட்டத்திலும், ‘இந்தி மாநிலம்’ என்று ஒன்று இருந்ததே இல்லை!

எனவே, இந்த மொழிக்கு அரசியல்—நிர்வாகத் துறைகளில் பழந் தொடர்பு இருந்திருக்க வழியில்லை!

இந்தி மாநிலங்களிலேயே ஒரு பகுதியில் பேசப்படும் இந்தி, இன்னொரு பகுதியில் பேசப்படும் இந்தியிலிருந்து வேறுபடுகிறது!

உத்தரப் பிரதேசத்தின் கிழக்குப் பகுதியில் உள்ளவர்கள் பேசும் இந்தி, உத்தரப் பிரதேசத்தின் மேற்குப் பகுதியில் உள்ளவர்களுக்குப் புரிவதில்லை!

இந்தியின் சொற்களஞ்சியத்தைப் பெருக்குவதற்காகப் பல்வேறு செயற்கை முறைகள் கையாளப்படுகின்றன! வழக்கொழிந்த சொற்களையெல்லாம் புதைகுழியிலிருந்து எடுத்து, அவற்றிற்குப் புத்துயிர் அளிக்க முயற்சி செய்யப்படுகிறது.

பைத்தியக்காரத்தனமாக இப்படி உருவாக்கப்பட்டுவரும் ‘புதிய இந்தி’யை, இந்தி மாநிலங்களிலேயே ஒரு சதவிகித மக்களால் கூட புரிந்துகொள்ள முடியவில்லை!

179 மொழிகளையும், 544 வட்டாரத் துணை மொழிகளையும் கொண்ட ஒரு நாட்டில்—30 கோடி மக்களால் ஒரு தனி மொழியை எழுதவோ பேசவோ முடியாத நிலைமை இருக்கிறபொழுது—‘இந்தி, பெரும் பகுதி மக்களுடன் தொடர்புகொள்ள உதவும்’ என்று பேசுவது, முட்டாள்தனமான வெறும் கற்பனையேயாகும்!

‘விவசாயிகள் ஆங்கிலம் கற்றுக்கொள்வார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்’ என்று தலைமையமைச்சர் கேட்டிருக்கிறார்!

அப்படியானால், தமிழ்நாட்டிலும், வங்காளத்திலும் உள்ள விவசாயிகள் இந்தியை மட்டும் கற்றுக்கொள்வார்கள் என்று நம்மால் எப்படி எதிர்பார்க்க முடியும்?

தத்தம் பகுதிகளில், மாநிலமொழிதான் பொதுமக்களின் மொழியாக இருக்கமுடியும்.

இந்தி பேசாத பகுதிகளில், அது, பேச்சுத் தொடர்புக்கான மொழியாகக்கூட ஆதரவு பெறவில்லை!

இந்தியை இவ்வளவு கட்டாயப்படுத்திக் கற்பித்தும்கூட, 1951 மொழிக் கணக்கெடுப்பின்போது, 1·1 கோடி பேர் ஆங்கிலத்தைத் தம்முடைய இரண்டாவது மொழியாக அறிவித்தபொழுது, 90 இலட்சம் பேர்தான் இந்தியைத் தங்கள் இரண்டாவது மொழியாகக் குறிப்பிட்டார்கள்!

‘அனைத்திந்தியக் கல்வியமைப்பில் இந்திக்கு இடமேயில்லை’ என்று சொல்லிவிடலாம். இந்தி மாநிலங்களிலேயே அது, மேற்படிப்பிற்கான பயிற்சி மொழியாக ஆக முடியவில்லை!

இந்தியைப் பாட மொழியாகக் கொண்ட மாணவர்கள்கூட—பயிற்று மொழியைத் தேர்ந்தெடுக்கச் சொன்னால்—ஆங்கிலத்திற்குத்தான் முதலிடம் தருகிறார்கள்!

அண்மையில், உத்தரப் பிரதேசத்தில், ‘இண்டர்மீடியட்’ வகுப்பில் படிக்கும் கல்லூரி மாணவர்களிடம்—இந்தி அல்லது ஆங்கிலத்தில் தேர்வுகளை எழுதச் சொன்னபோது—85 சதவிகித மாணவர்கள் ஆங்கிலத்தைத்தான் தேர்ந்தெடுத்தார்கள். இந்த மாணவர்கள் இவ்வளவு காலமும், இந்தியில் கல்வி பயின்று வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

உயர்நிலைப் பள்ளிகளில்கூட, இன்று இந்தி பயிற்று மொழிக்கான பயனுள்ள கருவியாக இல்லை!

இந்தியில் போதிய பாட நூல்களும், அறிவு நூல்களும் கிடையா; அவற்றை இந்தியில் மொழிபெயர்ப்பது பற்றி வழவழாப் போக்கில் பேசிக்கொண்டிருப்பதன் மூலம், உருப்படியாக எதையும் எதிர்பார்க்க முடியாது!

உத்தரப் பிரதேச அரசு மொழிபெயர்ப்பிற்காக 30 இலட்சம் ரூபாய்களைச் செலவழித்த பிறகு, இப்போது அந்தத் திட்டத்தையே ரத்து செய்துவிட்டது!

இந்தி ஒரு மாநில மொழிதான்; நடைமுறையில் ஆங்கிலம்தான் இன்று கல்வித்துறையில் இந்தியாவின் இணைப்பு மொழியாக விளங்குகிறது!

200 ஆண்டுகளுக்கு மேலாக, நமது கல்வியைச் சீரான முறையில் வளர்த்து வந்துள்ளதும் ஆங்கிலம்தான்! இந்தியைப் போல அது ஒரு குறிப்பிட்ட மாநிலத்திற்கோ அல்லது மாநில மொழிக்கோ சலுகை ஏற்படுத்திக் கொடுக்காது!

இங்கே இப்படி— அங்கே அப்படி!

இங்கே—இந்தியாவில்— மக்கள் தொகை பெருகிவருவதைக் கண்டு ஆட்சியாளர்கள் நடுங்கிக்கொண்டிருக்கையில், ருமேனியா, ஹங்கேரி, செக்கோஸ்லோவாகியா, பல்கேரியா போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகள், ‘மக்கள் தொகை குறைந்துவருகிறதே; எதிர்காலத்தில் வேலை செய்வதற்கு ஆட்கள் கிடைக்காமல் போய்விடுவார்களே’ என்று கவலை கொண்டுள்ளன.

கருத்தடைச் சட்டங்களை இந்நாடுகள் திருத்தியமைத்துக் கொண்டிருக்கின்றன. திருமணம் செய்துகொண்டு குழந்தைகளைப் பெறச்சொல்லிப் பல்கேரிய அரசு தனது குடிமக்களை உற்சாகப்படுத்திவருகிறது!



1½ டன் எடை சாமான் ஏற்றும் பார்கோ D-300*

சிறிய வண்டிகளிலே பெரிது; பெரிய வண்டிகளின் உழைப்பு. சுருங்கச் சொன்னால் நடுத்தரமான நல்ல வண்டி பார்கோ D-300. அதிகச் சாமான்களை ஏற்றிச் செல்ல அடக்கமான வண்டி பார்கோ D-300. சாலைகளிலே சங்கடமில்லாமல் ஓட்டவும் போக்குவரத்து நெரிசலைச் சுலபமாகச் சமாளிக்கவும் பொருத்தமான வண்டி பார்கோ D-300. பிக் அப்-வான், டெலிவரி வான், ஸ்டேஷன் வாகன், ஆம்புலன்ஸ் ஆகிய எந்த விதத்திலும் உபயோகிக்கலாம். நகரத்திலும் அதன் சுற்றுப்புரங்களிலும் ஆட்களையும் சாமான்களையும் குறைந்த செலவில் ஏற்றிச் செல்ல, இணையற்ற வண்டி பார்கோ D-300

சக்தி மிக்க 28.35 H.P. பெட்ரோல் என்ஜின் ● 3,112 மீ.மீ. (123”) WB அல்லது 3,336 மிமி (133”) WB ஆகிய இரண்டில் விருப்பமானதைத் தேர்ந்தெடுக்கலாம் ● சுலபமாகவும் விரைவிலும் ரிப்பேர் செய்ய பானெட் திறப்பு வசதி.

* (பிரிமியர் ஆட்டோமோபைல்ஸ் தயாரிப்பு)

தவணை ஏற்பாடு

சுந்தரம் பைனன்ஸ் லிமிடெட் மூலம் சுலபமான மாதத் தவணைகளில் வாங்கலாம்.





முழு விவரங்களுக்கு அன்பு கூர்ந்து அணுகுக:

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட் மதுரை - திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர் - திருவனந்தபுரம். சப் டீலர்கள்: P. N. கிருஷ்ண அய்யர் & ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சூர் - C. C. ஆட்டோமோபைல்ஸ் லிமிடெட், கள்ளிக்கோட்டை - திருவிலோன் ஆட்டோமோபைல்ஸ் லிமிடெட், கொல்லம் - மனோரஞ்சன் காங்கூலி & ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட், புதுச்சேரி.

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் மதராஸ் - பங்களூர் - செகந்திராபாத் (A.P.) சப்டீலர்கள்; காரபதி காராஜ் 1959, விஜயவாடா - ஸ்ரீ பட்டாபிராம் கமர்ஷியல் சிண்டிகேட், காக்கிநாடா, விசாகப்பட்டிணம் - D. S. ஆட்டோமோபைல்ஸ், நெல்லூர் - தி மோட்டார் சேல்ஸ் கம்பெனி, அனந்தப்பூர் - கர்நூல் - T. N. ரகுநாத ரெட்டி, கடப்பை - ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோமோபைல்ஸ், ஹோஸ்பேட் - P. V. பய் & கம்பெனி மங்களூர், மெர்க்காரா

TVS

sf-4272

காமராசரைக் கவனித்தீர்களா?

சுப்பிரமணியத்துக்கும் தோள் கொடுக்கவில்லை--- சொல்லிலும் தெளிவு இல்லை!

‘இந்தி வளர வேண்டாமா?’ என்கிறார்--‘ஆங்கிலம் அகல வேண்டாமா?’ என்கிறார்--என்ன பரிவு! என்ன அக்கறை!

இது என்ன பதவி ‘எக்ஸ்டன்ஷ’னு?-இவரும் ஒரு பச்சைத் தமிழரா?

—: [எஸ். ஆர்.] :—

காமராசர் சென்னைக்கு வருவதும்—புதுடில்லிக்குப் போவதும்தான், ‘இன்று வருகிறார்’—‘நாளை போகிறார்’ என்று செய்தித் தலைப்புக்களாக அல்லது ‘பாக்சு’களாகப் பரிமளிக்கிறதே தவிர, அங்கே அவர் ‘சாதிப்பவை’கள் என்ன என்பது சந்தேகத்துக்கு இடமளிப்பதாகவும், சங்கடத்தை விளைவிப்பதாகவும்தான் இருக்கின்றன!

மூன்று நாட்களாக நடைபெற்றதாகக் கூறப்படும் காங்கிரசு செயற்குழுக் கூட்டத்தில், மொழிப் பிரச்சினை தலைதூக்கி நின்றிருக்கிறது!

அதில், ‘தலைவர்’ என்ற முறையில் இல்லாவிட்டாலும், ‘தமிழர்’ என்ற அளவிலாவது காமராசரிடமிருந்து எவ்வளவோ எதிர்பார்க்கப்பட்டது!

‘செப்டம்பர் 1-ல் காமராசரைக் கவனியுங்கள்’ என்றுகூட இதே இதழில், ‘முன்னறிவிப்பு’ வெளியிடப்பட்டிருந்தது!

ஆனால் காமராசர், எல்லோரையும் தலைகுனியச் செய்துவிட்டார்!

ஏறக்குறைய அதேநேரத்தில், தமிழக அமைச்சர் மாதவன், சட்ட அமைச்சர்கள் மாநாட்டில் எழுப்பிய உரிமைக்குரல்—தந்த மொழி விளக்கத்தை, தனக்கோர் பக்கபலமாகக் காமராசரால் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கலாம்!

அதுவும்கூட வேண்டாம்; ‘ஆங்கிலமும் தொடர்ந்து நீடிக்க வேண்டும்’ என்ற கருத்துக்கு மறுப்புத் தெரிவித்து, ‘அதற்கும் ஒரு காலக் கட்டத்தை நிர்ணயிக்க வேண்டும்’ என்று வாதாடிய துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாயுடன் போராடியதாகக் கூறப்படும் சுப்பிரமணியத்துக்காவது காமராசர் தோள் கொடுத்திருக்கலாம்—உற்சாகம் தந்திருக்கலாம்!

அவர்கள் கட்சித் தரப்பிலும், ஆட்சித் தரப்பிலும் கூறப்படுகிற மொழிச் சட்டத் திருத்தமோ, அல்லது தமிழகம் கோரும் அரசியல் சட்டத் திருத்தமோ இந்தி மொழி வளரவேண்டுமென்பதற்காக அல்ல—

1. **இந்தி ஆதிக்கம் கூடாது என்பதற்காக!**
2. **இந்தி அல்லாத மொழிகளுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்பதற்காக!**
3. **எல்லோருக்கும் பொதுவான ஒரு இணைப்புமொழியாக ஆங்கிலமும் காலவரையறையின்றி நீடிக்க வேண்டுமென்பதற்காக!**

ஆனால் காமராசர், இதில் எதையும் புரிந்துகொண்டிருப்பதாகத் தெரியவில்லை!

‘மொழி மசோதாவை மத்திய அரசு, உடனடியாக அமுலாக்க வேண்டும்’ என்று கருத்துத் தெரிவித்திருக்கும் அவர்,

‘அப்போதுதான் இந்தி, படிப்படியாக
முன்னேற வாய்ப்புகள் இருக்கும்’

என்றும் கூறியிருக்கிறார்!

அத்துடனாவது விட்டாரா என்றால், இல்லை!

‘இல்லையென்றால்...’ என்று ஆரம்பித்து, மேலும் பேசியிருக்கிறார்—

“...இல்லையேன்றால், இந்தி பேசாத மாநிலங்கள், ‘இப்போது உள்ள நிலையே நீடிக்கட்டுமே’ எனக் கேட்கக் கூடும்; இது, இந்தி மொழி வளருவதை—(வட்டார மொழிகள் என்பதையும், ‘பாவ புண்ணியத்துக்காக’ச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்) இருக்கும் நிலை நீடிப்பதை—தடை செய்யும்” என்று!

ஆங்கிலம் தொடர்ந்து ஓர் இணைப்பு மொழியாக இருப்பதையோ அல்லது ஒரு முக்கிய சாதனமாக இருப்பதையோ வன்மையாக வெறுத்திருக்கிறார் காமராசர்!

அப்படியானால், அந்த இடத்தில் இந்தியைத்தானே நிரப்புவார்கள்? அது, மற்ற மொழிக்காரர்களுக்குப் பாதகம் தானே—இந்தி மொழி பேசுவோருக்கு அது இரட்டிப்புச் சாதகம் தானே—என்பதை, அவர் உணரவே இல்லையே!

உணர்ந்தும் அவர் ஏற்க மறுக்கிறாரா என்பதும் புரியவில்லையே!

மொழி மசோதா அமுலாவது அரசியல் சட்டப் பாதுகாப்பு இல்லையென்றாலும், ஆங்கிலமும் காலவரையறையின்றி இணைப்பு மொழியாக நீடிக்க வேண்டும் என்ற தத்துவத்தை உள்ளடக்கிய ஒன்று!

அப்படியிருக்க, ‘ஆங்கிலம் தொடர்ந்து நீடிப்பது, இந்தியை வளரவிடாது’ என்று காமராசர் பரிவட்டம் கட்டுவதில் என்ன பொருத்தம் இருக்கிறது?

★ இருக்கும் நிலையும் நீடிக்கக்கூடாது—அதனால், இந்தி மொழி வளராது!

★ மொழி மசோதாவும் அமுலாக வேண்டும்; ஆனால் ஆங்கிலமும் நீடிக்கக்கூடாது!

இது, காமராசர் தெரிவித்திருக்கும் கருத்துக்களின் சாரம்! மொழி உணர்வு இல்லாத அவரது இதயத்திலிருந்து வெளிவந்திருக்கும் சக்கை!

★ சட்ட அமைச்சர்கள் மாநாட்டில், ஏன் வீணான சர்ச்சையைக் கிளப்பினீர்கள்?

★ ஆங்கிலமும் இணைப்பு மொழியாக நீடிப்பதற்குக் காலக் கட்டம் ஏன்? கூடாது—அடாத செயல்!

★ விவரங்களைப் புரிந்துகொள்ளாமல் தென்னகத்தில் புதிய விளைவுகளைக் கிளப்பாதீர்கள்!

என்றெல்லாம் குரல் கொடுத்திருக்கும் சுப்பிரமணியத்தின் போக்கினில் காணப்பட்டிருக்கும் ஏதோ ஒரு பொறுப்பு உணர்ந்த தன்மை—தமிழராக மட்டுமல்லாமல்—காங்கிரசின் தலைவராகவும் இருக்கும். காமராசரின் அறிவிப்பில் காணப்படாதது—‘பச்சைத் தமிழர்’ என்ற அறிமுகத்துடன் அரசியல் வளர்ச்சி பெற்ற அவரது மொழி உணர்வை, சந்தேகத்துக்குள்ளாக்குகிறது!

அல்லது மொழிப் பிரச்சினையை ஒரு மொழிப் பிரச்சினையாக மட்டும் இல்லாது அரசியல் பிரச்சினையாகவும் மாற்றியிருக்கும் இந்திக்காரர்களைப்போல் காமராசரும் ஓர் அரசியல்வாதியாக மட்டுமே மாறி, பதவியைக் காப்பாற்றிக்கொள்ளும் மறைமுகச் சாதனமாக இந்த விவகாரத்தைப் பயன்படுத்துகிறாரோ என்று கூடச் சந்தேகிக்க வைக்கிறது!

காங்கிரசு செயற்குழுவின் மொழி விவாத முடிவில், காமராசர் கூறியுள்ள வார்த்தைகளில்—

தெளிவு இல்லை---
உணர்வு இல்லை---
சாத்தியக்கூறு இல்லை!

இது, கட்சி மட்டத்திலும் காங்கிரசுக்காரர்களுக்குக் கிடைத்திருக்கும் மற்றொரு சாதகம்!

அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

சென்னை மாவட்ட தி.மு.க. தோழர்களுக்கு :

“பேரறிஞர் அண்ணா அவர்களின் 59-வது ஆண்டு பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள், இத்திங்கள் 15-ம் நாள் முதல் 22-ம் நாள்வரை சிறப்பாக நடத்த ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

“சென்னையைச் சார்ந்த பகுதி — வட்ட — கிளைக் கழக — துணை மன்றத் தோழர்கள் பலர் அதற்கான தீவிர முயற்சியில் ஈடுபட்டவண்ணமிருக்கின்றனர். அவை அனைத்தையும் சீர்படுத்திச் செயல்படுத்த வேண்டியிருக்கிறது.

“ஆகவே, நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்துகொண்டிருப்பவர்கள் அனைவரும் தவறாது, 6—9—67 புதன் மாலை 6 மணிக்கு, ‘அன்பக’த்தில் நிகழ்ச்சி நிரல் குழுவினரைச் சந்திக்க வேண்டுகிறேன்.

“அதேபோல, பகுதிக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாது வருகைதர வேண்டுகிறேன்”

என்று, நிகழ்ச்சி நிரல் குழுத் தலைவர் டி. கே. பொன்னுவேலு அறிவிக்கிறார்.

முகவரி மாற்றம்

அமைப்புச் செயலாளர்
என். வி. நடராசன்
எம்.எல்.சி.
9, பாண்டு லைன்ஸ்,
அரசினர்த் தோட்டம்,
மவுண்ட் ரோடு, சென்னை-2.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

செப். 6: ஆம்பூர் 7, 8: மதிப்பீட்டுக் குழுக் கூட்டம்—சென்னை; 10: விருத்தாசலம்; 12: சென்னை 56-வது வட்டம்; 13: பண்ருட்டி; 14: நெல்லிக்குப்பம்; 15: மெய்யூர்; 16: ஆம்பூர்; 18: செம்பனார் கோயில்; 19: கோமல்; 20: வலங்கைமான்; 21, 22: குடந்தை; 23: ஆண்டிபட்டி; 24, 25: மதுரை; 26, 27: சென்னை; 29: சென்னை 64-வது வட்டம்; 30: பெங்களூர்.

சீரணியினர் துப்புரவுப் பணி

கி. மனோகரனும் கலந்துகொண்டார்

சென்னை, செப். 5—
சென்னையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை சீரணியினர் மேற்கொண்ட துப்புரவுப் பணியில், நாடாளுமன்ற தி.மு.க. குழுவின் துணைத் தலைவர் கி. மனோகரனும் பங்கேற்றார்.

சென்னை 64-வது வட்டத்தில் அவர், கூட்டுக் கோல் பிடித்துத் துப்புரவு செய்து, பணியினைத் துவக்கிவைத்தார்.

சீரணித் தலைவர்

சென்னை மாவட்டச் தி. மு. க செயலாளர் தோழர் நீலநாராயணன், சென்னை மாவட்டச் சீரணித் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

‘மக்கள் பிணி நீக்கும் பணிக்குத் தனியார் உதவியும் தேவை’

இரக்கமனமுடையவர்களுக்கு அறிஞர் அண்ணா வேண்டுகோள்

சென்னை, செப். 3—

“வளர்ந்து வரும் மக்கட் பெருக்கத்துக்கேற்ற அடிப்படை மருத்துவ வசதிகளைச் செய்தளிப்பதில் அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு, கொடையுள்ளம் படைத்த தனிப்பட்டவர்களும் உதவவேண்டும்”

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள்.

திருவல்லிக்கேணி இளம்பிறை மருத்துவமனையின் புதிய கட்டிடம் ஒன்றிற்கு அண்ணா அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த விழாவில், சுகாதார அமைச்சர் திரு. சாதிக்பாட்சா அவர்களும் கலந்துகொண்டார்.

காயிதே மில்லத் இஸ்மாயில் தலைமையில் விழா நடைபெற்றது.

டாக்டர் அபிபுல்லா பேக் அனைவரையும் வரவேற்றார்.

அண்ணா அவர்கள் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“அரசு என்பது, மக்களிடமிருந்து வரியாகப் பணத்தை வசூலித்து அதனைப் பல்வேறு முன்னேற்றப் பணிகளுக்கும் செலவு செய்யும் ஓர் அமைப்பேயாகும். எனவே, கல்வி, மருத்துவம் ஆகிய துறைகளில் சீரிய பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பு, தனிப்பட்ட நிறுவனங்கட்கும், பொது நல நோக்கம் கொண்ட அறநிலையங்கட்கும் இருக்கிறது.”

இந்த மருத்துவமனையின் கட்டிடக் குழுத் தலைவராகவும் சுகாதார அமைச்சராகவும் உள்ள திரு. சாதிக்பாட்சா பேசுகையில், ‘ஏழைகளுக்கு உதவும் இத்தகைய மருத்துவமனைகளை மேலும் விரிவுபடுத்தவும், புதிய மருத்துவமனைகளை ஏற்படுத்தவும், தாராளமாக நன்கொடையளித்து உதவ முன்வரவேண்டும்’ என்று முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த வியாபாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

நடக்க இருப்பவை

6--9--67

கோவை 18-வது வட்டம்

மூவேந்தர் மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு பெருமாள் கோவில் வீதியில்; பேசுவோர்: மாணிக்கவாசகம் எம்.எல்.ஏ., ப. கோபால், மு. இராமநாதன், பி. எஸ். சானகிராம், மு. தமீம், அ. காந்தி.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.